31.12.2016

# ஈரோட்டை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும் வேளாண்மை குறைதீர்க்கும்நாள் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை



ஈரோட்டை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என்று வேளாண்மை குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

வறட்சி மாவட்டம்

ஈரோடு மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள கூட்டரங்கில் நேற்று காலை நடைபெற்றது. கூட்டத்துக்கு மாவட்ட கலெக்டர் எஸ்.பிரபாகர் தலைமை தாங்கினார். மாவட்ட வருவாய் அதிகாரி ஆர்.சதீஸ் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் விவசாய சங்க நிர்வாகிகள் கலந்துகொண்டு தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார்கள். அப்போது அவர்கள் கூறியதாவது:-

பருவமழை பொய்த்து போனதால் பவானிசாகர் அணையில் நடப்பு ஆண்டில் 6 டி.எம்.சி. தண்ணீர் மட்டுமே இருப்பு உள்ளது. இதன்காரணமாக ஈரோடு மாவட்டத்தில் கடுமையான வறட்சி நிலவி வருகிறது. எனவே ஈரோட்டை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும். அதுமட்டுமின்றி பவானி ஆற்றில் இருந்து கோவை, திருப்பூர் ஆகிய மாவட்டங்களுக்கு குடிநீருக்காக தண்ணீர் எடுக்கப்படுகிறது. சிறுவானி அணையில் தண்ணீர் இல்லாததால் பில்லூர் அணையில் இருந்து கோவைக்கு தண்ணீர் கொண்டு செல்லப்படுகிறது. இதுபோன்ற காரணங்களால் பவானிசாகர் அணைக்கு தண்ணீர் வரத்து மிகவும் குறைந்துவிட்டது.

கசிவுநீர் திட்டம்

திருப்பூரில் நாட்டு மாடுகளை விற்பனை செய்ய தனியாக மாட்டுச்சந்தை செயல்படுவது போல் ஈரோட்டிலும் நாட்டு மாட்டுச்சந்தை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாய நிலங்களில் பிரதான பயிருடன் ஊடுபயிர் சாகுபடி செய்யும்போது வங்கிகளில் பிரதான பயிருக்கு மட்டுமே பயிர்க்கடன் வழங்கப்படுகிறது. பிரதான பயிருடன் சேர்த்து ஊடுபயிர் சாகுபடிக்கும் பயிர்க்கடன் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மஞ்சள் விற்பனையை கணினி மயமாக்குதல், தரம் சோதித்தல் ஆகியவற்றில் விவசாயிகளுக்கு உள்ள குழப்பங்களை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கீழ்பவானி வாய்க்கால் பாசனத்தில் உள்ள 37 கசிவுநீர் திட்டங்களும் முறையாக பராமரிக்கப்படாமல் உள்ளது. காஞ்சிக்கோவில் பகுதியில் உள்ள ஒரு கசிவுநீர் திட்டத்தை தூர்வார சமூக அமைப்பு ஒன்று தயாராக உள்ளது. எனவே கசிவுநீர் திட்டங்களை விவசாயிகள் நிதி பங்களிப்புடன் சீரமைக்க அனுமதி வழங்க வேண்டும்.

நதிகள் இணைப்பு

பணத்தட்டுப்பாடு காரணமாக விவசாயிகள் பயிர்க்கடன் செலுத்துவதற்கு சிரமம் ஏற்பட்டு உள்ளது. இதனால் 2 மாதங்கள் காலஅவகாசம் வழங்கப்பட்டது. இந்தநிலையில் கூடுதலாக 30 நாட்கள் மத்திய அரசு காலஅவகாசம் வழங்கி உள்ளது. இதுதொடர்பான சுற்றறிக்கையை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும். நடப்பு நிதி ஆண்டில் விவசாயிகளுக்கு தேவையான எந்திரங்களை பொறியியல் துறை சார்பில் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். சர்க்கரை ஆலையில் இருந்து விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவை தொகையை உடனடியாக வழங்க வேண்டும்.

தேசிய நீர்வழி மசோதாவை மத்திய அரசு கொண்டு வந்து உள்ளது. அதன்படி 106 ஆறுகள் இணைக்கப்பட்டு நீர்வழி போக்குவரத்து தொடங்கப்பட உள்ளது. இதில் 6 நதிகள் தமிழ்நாட்டில் இணைக்கப்படுகிறது. ஈரோடு மாவட்டத்தில் பவானி ஆறும், காவிரி ஆறும் தேர்வு செய்யப்பட்டு உள்ளன. இந்த திட்டத்தை நிறைவேற்றுவதில் மாவட்ட நிர்வாகத்திடம் கருத்து கேட்கப்பட உள்ளது. இதுதொடர்பாக மாவட்ட நிர்வாகம் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து விளக்க வேண்டும்.

4 வழிச்சாலை

சித்தோடு-சத்தியமங்கலம் 4 வழிச்சாலை அமைக்கும் பணி கடந்த 3 ஆண்டுகளாக தொடங்கப்படாமல் உள்ளது. இந்த திட்டத்தின்படி சிற்றூர்களில் 110 அடி, பேரூராட்சிகளில் 100 அடி, நகராட்சிகளில் 90 அடி அகலத்தில் நிலம் கையகப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. ஆனால் தற்போது நகராட்சி பகுதியில் 65 அடி என மாற்றி அமைக்கப்பட்டது. ஏராளமான விவசாய நிலங்கள் கையகப்படுத்தப்பட உள்ள நிலையில் நகராட்சி பகுதியில் மட்டும் ஏன் குறைவான நிலம் கையகப்படுத்தப்படுகிறது.

கடந்த ஆண்டை போலவே கரும்பு டன்னுக்கு ரூ.2 ஆயிரத்து 850 அறிவிக்கப்பட்டு உள்ளது. தற்போது ஏற்பட்டு உள்ள வறட்சி மற்றும் சாகுபடிக்கான கூடுதல் செலவு ஆகியவற்றை கருத்தில் கொண்டு கரும்புக்கான விலையை அதிகரித்து நிர்ணயம் செய்ய வேண்டும். சாய, சலவை தொழிற்சாலைகளில் இருந்து கழிவுநீர் சுத்திகரிக்கப்படாமல் தொடர்ந்து வெளியேற்றப்படுகிறது. இதை தடுக்க கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். குடிநீருக்கு தட்டுப்பாடு அதிகமாக உள்ளதால் வாய்க்கால்களில் 15 நாட்களுக்கு தண்ணீர் திறக்க வேண்டும். இவ்வாறு விவசாயிகள் கூறினார்கள்.

முன்னதாக விவசாயிகள் பலரும் தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி மனுக்களை கொடுத்தனர்.

மஞ்சளை தரம் பிரித்தல்

கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் எஸ்.பிரபாகர் மற்றும் அதிகாரிகள் பதில் அளித்து பேசும்போது கூறியதாவது:-

ஆழ்துளை கிணறு மூலம் தண்ணீர் எடுத்து டேங்கர் லாரி, டிராக்டர்களில் விற்பனை செய்வதாக புகார் வந்து உள்ளது. இதுதொடர்பாக உள்ளாட்சித்துறை அதிகாரிகள் ஆய்வு நடத்தி நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டு உள்ளது. ஊடுபயிர் சாகுபடிக்கும் பயிர்க்கடன் வழங்க வேண்டும் என்கிற அரசாணை உள்ளது. எனவே வங்கிகளில் விவசாயிகள் ஊடுபயிருக்கும் தேவையான பயிர்க்கடனை பெற்றுக்கொள்ளலாம்.

மஞ்சள் விற்பனையை கணினி மயமாக்குதல் குறித்து தமிழகத்தில் முதல் கட்டமாக ஈரோடு மாவட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதுதொடர்பாக கணினி வல்லுனர்கள் கலந்து கொண்ட ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டது. இதில் அனைத்து மாவட்டங்களுக்கும் பொதுவான மென்பொருள் உருவாக்கவும், மஞ்சள் மட்டுமின்றி கொப்பரை தேங்காய், சோளம் போன்ற அனைத்து விளைபொருட்களையும் தரம் பிரித்து

ஆய்வுக்கூடம் அமைக்கவும் முடிவு செய்யப்பட்டு உள்ளது. தற்போது மஞ்சளை தரம் பிரித்து பார்க்க ஆய்வு செய்வது கட்டாயமாக்கப்படவில்லை. இந்த வாய்ப்பை தேவைப்படும் விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ளலாம்.

கருத்து கேட்பு கூட்டம்

விவசாயிகளுக்கு தேவைப்படும் எந்திரங்கள் குறித்து மனுவாக எழுதி கொடுத்தால் பொறியியல் துறை சார்பில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இதுதொடர்பான கருத்து கேட்பு கூட்டம் ஈரோடு வேளாண்மை பொறியியல் துறையின் செயற்பொறியாளர் அலுவலகத்தில் வருகிற 5-ந் தேதி (வியாழக்கிழமை) பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். இதில் விவசாயிகள் கலந்துகொண்டு தங்களுக்கு தேவையான எந்திரங்கள் குறித்து தெரிவிக்கலாம். கடந்த செப்டம்பர் 30-ந் தேதி வரை கரும்பு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவைத்தொகை வழங்கப்பட்டு விட்டது. மீதமுள்ள தொகையை வழங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டு உள்ளது. சித்தோடு-சத்தியமங்கலம் இடையே 4 வழிச்சாலை அமைக்க அதிக அளவிலான மரங்கள் இடையூறாக உள்ளன. இதில் உயிரோட்டம் உள்ள மரங்களை இடமாற்றி வைக்கவும், மரங்களை வெட்டுவது தொடர்பாகவும் நெடுஞ்சாலைத்துறையினர் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். இந்த பணிகள் முடிந்ததும் 4 வழிச்சாலை அமைக்கும் பணிகள் தொடங்கும். பவானி ஆறு, காவிரி ஆறு இணைக்கும் திட்டம் தொடர்பான கடிதம் தமிழக அரசிடம் இருந்து இன்னும் வரவில்லை.

இவ்வாறு அதிகாரிகள் கூறினார்கள்.

## தமிழகத்தை வறட்சி பாதித்த மாநிலமாக அறிவிக்க வேண்டும் கருகிய நெற்பயிர்களுடன் கலெக்டரை சந்தித்து விவசாயிகள் கோரிக்கை



தஞ்சாவூர்,

தமிழகத்தை வறட்சி பாதித்த மாநிலமாக அறிவிக்க வேண்டும் என்று கூறி கருகிய நெற்பயிர்களுடன் கலெக்டர் அண்ணாதுரையை சந்தித்து விவசாயிகள் கோரிக்கை வைத்தனர்.

கருகிய நெற்பயிர்களுடன் வந்த விவசாயிகள்

தஞ்சை மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் கலெக்டர் அண்ணாதுரை தலைமையில் நேற்று நடந்தது. கூட்டம் தொடங்கியவுடன் விவசாயிகள் சிலர், கருகிய நெற்பயிர்களுடன் கலெக்டர் அண்ணாதுரையை சந்தித்து கோரிக்கை மனு கொடுத்தனர். அப்போது அவர்கள், போதிய தண்ணீர் கிடைக்காததால் சாகுபடி செய்த நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே தமிழகத்தை வறட்சி பாதித்த மாநிலமாக அறிவித்து விவசாயிகளுக்குரிய நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினர். இதை கேட்ட கலெக்டர் அண்ணாதுரை உரிய நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தனர். இதையடுத்து விவசாயிகள் அங்கிருந்து புறப்பட்டு சென்றனர். இது குறித்து அகில இந்திய விவசாய

தொழிலாளர் சங்க மாவட்ட துணைத் தலைவர் வெ.ஜீவக்குமார் கூறும்போது, கேரள மாநிலம் முழுவதும் வறட்சி பாதித்த பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. கர்நாடகத்திலும் 20-க்கும் மேற்பட்ட வட்டாரங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டவை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் குறுவை சாகுபடி 5 ஆண்டுகளாக பாதித்தும், தமிழகத்தின் சராசரி மழைஅளவு 40 சதவீதத்திற்கும் குறைவாக இருந்தும் வறட்சி பாதித்த மாநிலமாக அறிவிக்கப்படவிலலை. எனவே தமிழகத்தை வறட்சி பாதித்த மாநிலமாக அறிவித்து விவசாயிகளுக்கு நெல்லுக்கு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரமும், கரும்புக்கு ஏக்கருக்கு ரூ.50 ஆயிரமும் இழப்பீடு வழங்க வேண்டும். விவசாய தொழிலாளர்களுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும். பயிர்க்கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும். கருகிய பயிரை கண்டு மனஉளைச்சலில் உயிரிழந்த விவசாயிகளின் குடும்பத்திற்கு ரூ.10 லட்சமும், குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலையும் வழங்க வேண்டும். கோடை சாகுபடிக்கு உளுந்து, எள் விதைகளை இலவசமாக வழங்க வேண்டும் என்றார்.

ஆடு, மாடுகள் மேயும் நிலை

திருவோணம் வட்டார விவசாயிகள் நலச்சங்க தலைவர் ரெங்கசாமி, செயலாளர் சின்னத்துரை, பொருளாளர் முருகேசன் ஆகியோர் கூறும்போது, கர்நாடக மாநிலம் தமிழகத்திற்குரிய தண்ணீரை கொடுக்க மறுத்ததாலும், பருவமழை போதிய அளவு பெய்யாததாலும் குறுவை நெல் சாகுபடி செய்ய முடியவில்லை. சம்பா சாகுபடி செய்வதற்கு போதிய தண்ணீர் கிடைக்கும் என்று நம்பி வீட்டில் இருந்து நகை மற்றும் பொருட்களை அடகு வைத்தும், கந்து வட்டிக்கு கடன் வாங்கியும் நெல் சாகுபடி செய்தனர். ஆனால் மேட்டூர் அணையில் போதிய தண்ணீர் இல்லாததாலும், மழை பெய்யாததாலும் சாகுபடி செய்த பயிர்கள் அனைத்தும் கருகிவிட்டன. பல இடங்களில் நெல் பயிர்களை ஆடு,

மாடுகள் மேய்ந்து வருகின்றன. இதனால் மனஉளைச்சலில் 30-க்கும் மேற்பட்ட விவசாயிகள் உயிரிழந்துள்ளனர். எனவே விவசாயிகளின் நிலைமையை மத்தியஅரசிடம் தமிழகஅரசு எடுத்து கூறி தமிழகத்தை வறட்சி பாதித்த மாநிலமாக அறிவிக்க வேண்டும் என்றனர்.

## நாமக்கல்லுக்கு 2,560 டன் மக்காச்சோளம் சரக்கு ரெயிலில் வந்தது



நாமக்கல்,

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கோழிப்பண்ணைகளுக்கு தேவையான மூலப்பொருட்கள் வடமாநிலங்களில் இருந்து சரக்கு ரெயிலில் கொண்டு வரப்படுகின்றன. அந்த வகையில் நேற்று காலையில் கர்நாடக மாநிலம் பாகல்கோடு பகுதியில் இருந்து 41 வேகன்களில் 2,560 டன் மக்காச்சோளம் சரக்கு ரெயிலில் நாமக்கல் கொண்டு வரப்பட்டது. பின்னர் அந்த மக்காச்சோள மூட்டைகள் நாமக்கல் ரெயில்வே கூட்ஸ்ஷெட் அசோசியேசனுக்கு சொந்தமான 150–க்கும் மேற்பட்ட லாரிகளில் ஏற்றி கோழிப்பண்ணைகளுக்கு கொண்டு செல்லப்பட்டன.

இதேபோல் நேற்று மாலையில் மராட்டிய மாநிலம் அமராவதி பகுதியில் இருந்து 1,300 டன் சோயா புண்ணாக்கு சரக்கு ரெயில் மூலம் நாமக்கல் கொண்டு வரப்பட்டது.

## நாமக்கல் மண்டலத்தில் கறிக்கோழி விலை கிலோவுக்கு ரூ.3 சரிவு



நாமக்கல்,

நாமக்கல் மண்டலத்தில் கறிக்கோழி கிலோ ரூ.78–க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. இந்தநிலையில் நேற்று பல்லடத்தில் நடந்த கறிக்கோழி ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் கறிக்கோழி விலையை கிலோவுக்கு ரூ.3 குறைக்க முடிவு செய்தனர். எனவே கறிக்கோழி விலை கிலோ ரூ.75 ஆக சரிவடைந்துள்ளது.

முட்டை கொள்முதல் விலை 384 காசுகளாகவும், முட்டைக்கோழி விலை கிலோ ரூ.56 ஆகவும் நீடிக்கிறது. அவற்றின் விலைகளில் மாற்றம் செய்யப்படவில்லை என பண்ணையாளர்கள் தெரிவித்தன

# புதிதாக ஆயிரம் ஏக்கரில் கரும்பு சாகுபடி: அமைச்சர் கந்தசாமி தகவல்



புதுவையில் புதிதாக 2 ஆயிரம் ஏக்கரில் கரும்பு சாகுபடி தொடங்கப்பட்டுள்ளதாக கூட்டுறவுத் துறை அமைச்சர் மு.கந்தசாமி தெரிவித்தார்.

புதுச்சேரி லிங்காரெட்டிப்பாளையம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் அரவைக்கான பணி வெள்ளிக்கிழமை தொடங்கியது. கூட்டுறவு துறை அமைச்சர் கந்தசாமி, விவசாயத் துறை அமைச்சர் கமலக்கண்ணன், ஆகியோர் கலந்துகொண்டு அரவைப் பணியைத் தொடங்கி வைத்தனர்.

பின்னர், செய்தியாளர்களிடம் அமைச்சர் கந்தசாமி கூறியதாவது: கரும்பு உற்பத்தியைப் பெருக்க அதிக சத்துள்ள கரும்புகளை நடவு செய்ய விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 10 ஆயிரம் ரூபாய் வீதம் மானியம் நிகழாண்டு முதல் வழங்கப்படுகிறது. இந்த மானியத்தின் காரணமாக, புதுவையில் புதிதாக 2,000 ஏக்கரில் கரும்பு சாகுபடி செய்ய விவசாயிகள்

முன் வந்துள்ளனர். நஷ்டத்தில் இயங்கும் கூட்டுறவு நிறுவனங்களை ஆய்வு செய்து, மூடுவதற்கு குழு அமைக்கப்பட்டுள்ளது. அதேவேளை லாபத்தில் இயங்கும் கூட்டுறவு நிறுவனஙகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு சர்க்கரை ஆலையில் இயங்கும் பான் போஸ் பள்ளியை அரசுப் பள்ளியாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். சட்டப்பேரவை உறுப்பினர்கள் டி.பி.ஆர்.செல்வம், இ.தீப்பாய்ந்தான், விவசாயத் துறை இயக்குநர் ராம்மூர்த்தி, கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் சிவக்குமார், கூட்டுறவு வங்கி அதிகாரி முரளி, கரும்பு அதிகாரி தெய்வசிகாமணி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

தினகரன்

## வைக்கோல் தட்டுப்பாடால் பால் உற்பத்தி செலவு அதிகரிப்பு தீவனமின்றி கறவை மாடுகள் தவிப்பு

மானாமதுரை : வைக்கோல் தட்டுப்பாடால் கறவை மாடுகள் வளர்ப்போருக்கு பால் உற்பத்தி செலவு அதிகரித்துள்ளது. சரியான தீவனமின்றி கறவைமாடுகள் தவிக்கின்றன. மானாமதுரை தாலுகாவிற்கு உட்பட்ட கிராமங்களில் கண்மாய்பாசனம் மூலம் ஒருபோக நெல்சாகுபடி விவசாயம் நடக்கிறது. ஆண்டுக்கு நான்கு மாதம் மட்டுமே விவசாயம் என்பதால் மாற்றுத்தொழிலாக பெரும்பாலான விவசாயிகள் கறவை மாடுகளை வளர்க்கின்றனர். தற்போது பால் லிட்டர் ஒன்றுக்கு கொள்முதல் விலையாக ரூ.27 முதல் ரூ.29 வரை விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இந்நிலையில் சமீபகாலமாக ஏற்பட்டு வரும் விலைவாசி உயர்வால், பால் உற்பத்திக்கான செலவு தொகை பல மடங்கு

அதிகரித்துள்ளது. இதனால் கறவை மாடுகள் வளர்க்கும் அனைத்து விவசாயிகளுக்கும் பெரும் நஷ்டம் ஏற்படுகிறது.

இந்த ஆண்டு எதிர்பார்த்த மழை இல்லாததால் விவசாயிகள் சாகுபடி செய்த நெல்பயிர்கள் கருகின. இதனால் அறுவடைக்குப்பின் கிடைக்கும் வைக்கோலுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வழக்கமாக பருவமழை துவங்கும் செப்டம்பர் மாதங்களில் கண்மாய் குளங்கள் நிரம்பி வயல்வெளிகள், தரிசு நிலங்களில் கால்நடைகளுக்கு தேவையான பசுந்தீவனங்கள் தாராளமாக கிடைக்கும். ஆனால் இந்தமுறை மாடுகளுக்கு பச்சை புல் மற்றும் தேவையான தண்ணீர் கிடைக்கவில்லை. இதனால் காய்ந்த வைக்கோல் கட்டு ஒன்று ரூ.150க்கும், புல் கட்டு ஒன்று ரூ.60க்கும் விலைக்கு வாங்கி மாடுகளுக்கு போட்டு வளர்க்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

மாடுகளுக்கு போடக்கூடிய உளுந்தங்குருணை, பச்சரிசி தவிடு உள்ளிட் அடர்தீவனம் மற்றும் புண்ணாக்குகளின் விலையும் பல மடங்கு உயர்ந்துள்ளது. வைக்கோல் தேவையை சமாளிக்க ராஜகம்பீரம், முத்தனேந்தல், இடைக்காட்டூர், பீசர்பட்டினம் பகுதிகளில் அகத்தி கீரை கட்டுகள் வாங்கி கால்நடைகளை தீவனக்குறைபாட்டில் இருந்து காப்பாற்றி வருகின்றனர். இதுகுறித்து பனைக்குளம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தலைவர் காளைலிங்கம் கூறுகையில், ‘இந்தாண்டு பருவமழை ஏமாற்றியதால் வைக்கோல் கிடைக்காமல் பெரும் அவதிபட்டு வருகிறோம். எங்கள் சங்கத்தில் இருந்து கடந்த செப்டம்பர் மாதம் வரை தினமும் 150 லிட்டர் பால் ஆவினுக்கு வழங்கி வந்தோம்.

ஆனால் வைக்கோல் தட்டுப்பாடால் கறவை மாடுகளிடம் பால் உற்பத்தி குறைந்து தினமும் 50 லிட்டருக்கு குறைவாகவே கிடைக்கிறது. புண்ணாக்கு விலை கிலோ ரூ.70க்கும் அகத்தி கீரை கட்டு ரூ.30க்கும், புல்லுகட்டு ரூ.50க்கும் விற்கிறது. இன்றைய சூழ்நிலையில் சாதாரண

கூலி வேலைக்கு செல்பவர்கள் கூட, நாள் ஒன்றுக்கு ரூ.200 முதல் ரூ.500 வரை சம்பாதிக்கின்றனர். விவசாயிகள் பாலை கறந்து விற்பதால் நாள் ஒன்றுக்கு, ரூ.200 கூட கிடைப்பதில்லை. இதே நிலை நீடித்தால் விவசாயிகள் இத்தொழிலை கைவிடும் சூழ்நிலை உருவாகும். தமிழகத்தின் பிறபகுதிகளில் கிடைக்கும் வைக்கோல்களை அரசே கொள்முதல் செய்து மானியவிலையில் வழங்க வேண்டும்' என்றார்.

## கைவிரித்த மழையால் கைவிடப்பட்ட விவசாயம் செங்கல் தயாரிப்பில் விவசாயக்கூலிகள்

மானாமதுரை : பருவமழை ஏமாற்றியதால் விவசாயத்தை கைவிடும் நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். இதனால் அவர்கள் வேறுவழியின்றி செங்கல், விறகுகரி தயாரிப்பு தொழிலுக்கு திரும்பியுள்ளனர். சிவகங்கை மாவட்டத்தில் சராசரியாக 93 ஆயிரம் ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்யப்படுவது வழக்கம். இந்தாண்டு மழையை நம்பி நேரடி விதைப்பு, நாற்றுநடவு மூலம் நெல் சாகுபடியில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு பருவமழை ஏமாற்றியது பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதனால் வயல்களில் உழுவுப்பணி, நாற்று நடவு, களை எடுத்தல், உரமிடுதல் உள்ளிட்ட பணிகளில் ஈடுபடும் ஆயிரக்கணக்கான விவசாயக்கூலி தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளனர்.

இதனால் கடந்த சில வாரங்களாக வேலையின்றி தவித்த விவசாயக்கூலிகள் தாங்கள் ஏற்கனவே வேலை செய்த செங்கல் காளவாசல், விறகு கரி உற்பத்தி செய்யும் இடங்களுக்கு வேலைக்கு திரும்பியுள்ளனர் மானாமதுரை, திருப்புவனம், திருப்புத்தூர், காரைக்குடி, சிங்கம்புணரி உள்ளிட்ட பகுதிகளில் காளவாசல், சேம்பர்கள் ஏராளமாக உள்ளன. இவற்றில் பெரும்பாலானவை மானாமதுரையில் தான் இருக்கின்றன. இதுதவிர பரமக்குடி அருகே மஞ்சூரிலும் செங்கல்

சேம்பர்கள், காளவாசல்கள் உள்ளன. சிவகங்கை, ராமநாதபுரம், மதுரை மாவட்டங்களில் உள்ள பெரும்பாலான கட்டுமானத்தேவைக்கு இங்கிருந்து உற்பத்தி செய்யப்படும் செங்கல்தான் அனுப்பப்படுகிறது. கடந்த ஆகஸ்ட் மாதம் முதல் நவம்பர் வரை மழை பெய்ததால் இங்கு வேலை செய்த பலரும் விவசாயப்பணிகளுக்கு சென்றனர். விவசாயப்பணிகள் நடக்கும் ஜனவரி மாதம் வரை செங்கல் தயாரிப்பு பணிகள் மந்தமாகவே இருக்கும். இந்தாண்டு எதிர்பார்த்த மழை இல்லாததால் விவசாயப்பணிக்கு சென்ற பலரும் மீண்டும் பணிக்கு திரும்பி வருகின்றனர்.

இதுகுறித்து விவசாயகூலித்தொழிலாளர் அழகர் கூறுகையில், “ பருவமழை தொடங்கும் காலம் முதல் 3 மாத காலத்துக்கு செங்கல் காளவாசல், விறகு கரி உற்பத்தியாகும் இடங்களுக்கு போகாமல் விவசாயப்பணிகளில் ஈடுபடுவது வழக்கம். ஆண்டுக்கு ஒருமுறை விவசாயப்பணிகளில் ஈடுபட்டு அதில் கிடைக்கும் நெல்லை சாப்பாட்டு தேவைக்கு பயன்படுத்திக்கொள்வோம். இந்தாண்டு மழை பொய்த்துபோனதால் விவசாயவேலைகள் கிடைக்கவில்லை. வேறுவழியின்றி மீண்டும் காளவாசலுக்கு வந்துவிட்டோம்” என்றார்.

## மரக்கன்று நடும் விழா

காரைக்குடி : காரைக்குடி ஸ்ரீ மீனாட்சி பெண்கள் பள்ளி என்எஸ்எஸ் திட்டம் மற்றும் நமது உரிமை பாதுகாப்பு இயக்கம் சார்பில் உதயம் நகர் பகுதியில் மரக்கன்றுகள் நடும் விழா நடந்து. நமது உரிமை பாதுகாப்பு இயக்கச் செயலாளர் கண்ணன் தலைமை வகித்தார். தலைமை ஆசிரியர் தெரசம்மா, என்எஸ்எஸ் திட்ட அலுவலர் செல்வி, சுற்றுசூழல் பாதுகாப்பு பிரிவுச் செயலாளர் பிரகாஷ்மணிமாறன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிறுவனத் தலைவர் பிரகாஷ் திட்டத்தை துவக்கிவைத்தார். என்எஸ்எஸ் திட்ட அலுவலர் லதா, பட்டதாரி ஆசிரியர்கள் கஸ்தூரி,

சீதாலட்சுமி, பானுப்பிரியா உள்பட பலர் கலந்துகொண்டனர். நூற்றுக்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடப்பட்டன.

தி இந்து
தமிழால் இணைவோம்

**2016 வேளாண் நிகழ்வுகள்**




2016 - ல் வேளாண்மைத் துறை சார்ந்து ஆக்கபூர்வமாகவும், பாதிக்கும் வகையிலும் பல நிகழ்வுகள் நடைபெற்றன. அவற்றின் தொகுப்பு:

உத்தரவை மதிக்காமல் காவிரியில் தண்ணீர் திறந்துவிட கர்நாடக அரசு மறுத்துவிட்டது. இதனால் காவிரிப் பாசன மாவட்டங்களில் பயிர்கள் கருகும் நிலை ஏற்பட்டது.


**மீத்தேன் திட்டம் ரத்து**

காவிரிப் பாசன மாவட்டங்களில் மீத்தேன் எடுக்கும் திட்டத்துக்கு தமிழக விவசாயிகள், சுற்றுச்சூழல் செயல்பாட்டாளர்கள் தொடர்ந்து எதிர்ப்பு

தெரிவித்துவந்தனர். இந்தத் திட்டம் முற்றிலும் ரத்து செய்யப்பட்டது. அது மட்டுமில்லாமல் ஷேல் எரிவாயு எடுக்கும் திட்டம் தொடர்பாக தமிழகத்தில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்த ஆய்வும் கைவிடப்பட்டது. மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் அக்டோபர் மாதம் இதை அறிவித்தார்.



**முழு இயற்கை வேளாண் மாநிலம்**



2016-ன் தொடக்கத்தில் இந்தியாவிலேயே முதன்முதலாக முழுமையான இயற்கை வேளாண் மாநிலமாக சிக்கிம் மாறியது. உலக அளவில் வரவேற்பைப் பெற்ற இந்த மாற்றம் மூலம் அறுவடை அதிகரித்தது, அனைவருக்கும் ஆரோக்கியமான உணவும் கிடைத்தது. கேரள மாநிலமும் பூச்சிக்கொல்லிகள் இல்லாத காய்கறிகள், மாடித் தோட்ட வேளாண்மை போன்றவற்றை ஊக்குவிக்கும் முயற்சிகளை முன்னெடுத்தது.

**சிறுதானியங்கள் ஊக்குவிப்பு**



கர்நாடக மாநிலம், ஆந்திரப் பிரதேசம், ஒடிஷா உள்ளிட்ட மாநில அரசுகள் சிறுதானியங்களை ஊக்குவிக்கும் திட்டங்களை இந்த ஆண்டு முன்னெடுத்துள்ளன. தமிழகத்திலும் ஆரோக்கிய விழிப்புணர்வு பரவலாகி வருவதன் ஒரு பகுதியாக சிறுதானியங்களை உணவில் சேர்த்துக்கொள்ளும் பண்பு அதிகரித்திருக்கிறது.

**மரபணு மாற்றுக் கடுகு**



உலகிலும் இந்தியாவிலும் முதன்முறையாக மனிதர்கள் உண்ணக்கூடிய, மரபணு மாற்றுக் கடுகுப் பயிரை வணிகரீதியில் அறிமுகப்படுத்த 2016-ல் மத்திய பா.ஜ.க. அரசு தீவிரமாக முயற்சித்தது. விவசாயிகள், பாதுகாப்பான உணவை வலியுறுத்துபவர்கள், சுற்றுச்சூழல் செயல்பட்டாளர்களின் தொடர் எதிர்ப்பால் இந்த ஆண்டு அது அறிமுகப்படுத்தப்படவில்லை. இத்தனைக்கும் மரபணு மாற்றுக் கடுகுக்கு ஆதரவாக முன்வைக்கப்பட்ட வாதங்கள் போலியாக உருவாக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

**காப்பீட்டுக்கு ஆதரவில்லை**




ஃபசல் பீமா யோஜனா என்ற பெயரில் புதிய பயிர் காப்பீட்டுத் திட்டத்தை பிரதமர் மோடி ஆர்ப்பாட்டமாக அறிமுகப்படுத்தினார். பெரிய அளவில் விளம்பரங்களும் களைகட்டின. ஆனால், இந்தத் திட்டம் விவசாயி களிடையே வரவேற்பைப் பெறவில்லை. முந்தைய ஆண்டைவிட 2016-ல் இந்தத் திட்டத்தை தேர்ந்தெடுத்தவர்களின் எண்ணிக்கை குறைவு என்கின்றன செய்திகள்.

**வாழ்வைப் பறித்த பண மதிப்பு இழப்பு**




ஆண்டு முழுக்க பல்வேறு பிரச்சினைகளைச் சந்தித்த உழவர்களின் தலையில், ஆண்டு இறுதியில் மிகப் பெரிய இடியாக இறங்கியது பண

மதிப்பு இழப்பு. இதனால் விவசாயிகள் விளைபொருளை விற்க முடியாமலும், மொத்த விற்பனையாளர்கள் பொருட்களை வேறு யாருக்கும் அனுப்ப முடியாமலும், வாடிக்கையாளர்கள் விவசாய விளைபொருட்களை வாங்க முடியாமலும் கஷ்டப்பட்டனர். நாட்டில் பாதிக்கும் மேற்பட்டோர் உழவு, அது சார்ந்த தொழில்களை வாழ்வாதாரமாகக் கொண்டிருக்கும் நிலையில், பண மதிப்பு இழப்பு மிகப் பெரிய பிரச்சினைகளை உருவாக்கியுள்ளது.

**அந்தமான் விவசாயம் 14: வீட்டுத் தோட்ட வேளாண் காடு**



பன்முகத்தன்மை கொண்ட வீட்டுத் தோட்டங்கள் பெரும்பாலும் இயற்கையாக வளர்ந்த காடுகளை முற்றிலும் அழிக்காமல் சிறிது மாற்றங்கள் செய்தோ அல்லது ஒரு பகுதியில் நன்கு வளரும் பயன் தரும் மரங்களைத் தோட்டங்களில் நட்டோ உருவாக்கப்பட்டவை.

தற்போது இத்தகைய தோட்டங்கள் குறைந்தபட்சம் 400 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட இடங்களிலும்கூட உருவாக்கப்படுகின்றன. முன்பே நாம் கண்டதுபோல் தென்னை மரங்கள் நிகோபார் பழங்குடியினருடைய

பொருளாதாரத்தின் உயிர்நாடி. இருந்தாலும் பன்முகத்தன்மை கொண்ட வீட்டுத் தோட்டங்கள், ஒவ்வொரு பழங்குடியினக் குடியிருப்புப் பகுதியிலும் காணப்படும் இன்றியமையாத ஒரு நிலப் பயன்பாட்டு முறை.

இதைத் தவிர, அந்தமான் தீவுகளில் மேட்டுப்பாங்கான மற்றும் மலைச்சரிவுகளில் பின்பற்றப்படும் விவசாய முறைகள் பெரும்பாலும் வீட்டுத் தோட்ட வேளாண் காடுகளைச் சார்ந்தே அமைந்துள்ளன.

**பாக்கும் வாழையும்**

அந்தமானில் பின்பற்றப்படும் இம்முறையில் நிலஅமைப்பு, சமூகப் பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் தன்மையைப் பொறுத்து மரங்கள், காய்கறிகள் வேறுபடுகின்றன. இத்தோட்டங்களில் பெரும்பாலும் பாக்கு மரங்கள் அதிகப் பரப்பளவில் வளர்க்கப்படுகின்றன. மேலும், தென்னைக்கு அடுத்தபடியாகப் பாக்கு மரங்களே முதன்மையானவை. சில இடங்களில் தென்னையிடையே பாக்கு ஊடுபயிராகவும் பயிரிடப்படுகிறது. இதற்கு அடுத்தபடியாக அதிகமாகப் பயிரிடப்படுவது சீனாகேழா எனப்படும் கற்பூரவல்லி வகையைச் சேர்ந்த வாழை. கிழங்கு வகைகளான கருணை, சர்க்கரைவள்ளி, சிறுகொடி, சேம்பு மற்றும் நிகோபார் கொடி வகைகள் பயிரிடப்படுகின்றன. இதைத் தவிர உள்நாட்டு, புதிய ரகக் காய்கறிகளும் பயிரிடப்படுகின்றன.

**வேலி மரங்கள்**

தோட்டத்தைச் சுற்றி கிளைரிசிடியா, காட்டு அகத்தி, வில்வம் போன்றவை வேலியாகப் பேணப்படுகின்றன. தோட்டத்தின் ஒருபுறம் மூன்றுக்கும் மேற்பட்ட பசுமைமாறாக் காட்டு மரங்களான கர்ஜன், படாக், பாதாம்

போன்றவற்றைக் காண முடியும். இத்தகைய மரங்கள் அந்தமானில் குடியிருப்புகள் அமைவதற்கு முன்பே பரவியிருந்த காடுகளின் எஞ்சிய பகுதிகள்.

இவற்றைத் தவிரத் தென்னிந்தியாவிலிருந்து குடிபெயர்ந்தோரின் வீட்டுத் தோட்டங்களில் புளி, இலவம் பஞ்சு மரங்களையும் காண முடியும். நிகோபார் பழங்குடியினரின் வீட்டுத் தோட்டங்களில் உணவுக்காகப் பயன்படும் தாழம்பூ மற்றும் பலவகை மூலிகைகளும் காணப்படுகின்றன.